15.04.2025 S.C.No.138 of 2017 P.W.51 – Govindhasamy

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர் குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.**

(A1 and A6 absent. And their absence condoned u/s 317 of Cr.P.C. petitions filed and allowed. A2 to A5 present)

குறுக்கு விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 02.34 P.M.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

கே: அலி அக்பரிடமிருந்து தேதியிடப்படாமல் தாங்கள் பெற்ற புகாரில் "15.06.2015 அன்று பள்ளிக்கொண்டா காவல் ஆய்வாளர் மார்டின், காவலர்கள் ஐயப்பன், நாகராஜ், சபாரத்தினம், முரளி, சுரேஷ் மற்றும் முனியன் இவர்கள் ஆகியோர் ஷமீல் வீட்டிற்கு வந்து" என்று உள்ளதா என்றால் ?

ப: உள்ளது.

கே: இந்த புகாரில் கூறப்பட்டுள்ள ஷமீல் என்பவர் யார் என்பது குறித்து தெளிவு பெற விசாரணை செய்து யாரிடம் வாக்குமூலம் பெற்றீர்கள்?

ப: இவ்வழக்கின் வாதி K.M.அலி அக்பர் கொடுத்த வாக்குமூலத்தில் எனது சகளையான கௌஷ் பாஷா என்பவரின் மூத்த மருமகனான ஷமீல் பாஷா என்று குறிப்பிட்டுள்ளார். என்னுடைய விசாரணையில் ஷமீல் பாஷா என்றுதான் குறிப்பிட்டுள்ளார். புகாரில் ஷமீல் என்று குறிப்பிட்டுள்ளார்.

கே: நான் புகாரில் குறிப்பிட்டுள்ள ஷமீல் தான் அந்த ஷமீல் பாஷா என்று அவர் குறிப்பிட்டுள்ளாரா?

ப: இல்லை. என்னுடைய வாக்குமூலத்தில் ஷமீல் பாஷா என்றுதான் குறிப்பிட்டுள்ளார்.

கே: 15.06.2015 வழக்கு எதிரிகள் ஷமீல் வீட்டிற்கு போனதாக என்னென்ன ஆவணங்கள் கூறுகின்றன (புகாரை தவிற)?

ப: புகாரை தவிற வேறு எந்த ஆவணங்களிலும் குறிப்பிடப்படவில்லை.

கே: 27.06.2015 அன்று அலி அக்பரிடம் வாக்குமூலம் பதிவு செய்தது தாங்கள்தானே?

ப: ஆம்.

கே: அலி அக்பரின் கு.வி.மு.ச.பிரவு 161 வாக்குமூலத்தில் வழக்கு எதிரிகளின் பெயர்களை யார் எழுதி கொண்டு வந்ததின் அடிப்படையில் வழக்கு எதிரிகளுடைய பெயரை சேர்த்ததாக வாக்குமூலம் கொடுத்திருக்கிறார் பார்த்து சொல்லுங்கள் ?

ப: தமிழக முஸ்லீம் முன்னேற்ற கழகம் (த.மு.மு.க.) கட்சியை சேர்ந்த ஆம்பூர் எம்.எல்.ஏ. அஸ்லாம் பாஷாவுடன் இருக்கும் த.மு.மு.க. முக்கிய பொறுப்பில் உள்ள ஷமீல் அகமது என்பவர் யாருடைய பேச்சையோ கேட்டுக்கொண்டு சிறிய துண்டுச்சீட்டில் எழுதியுள்ள பெயர்களை சேர்த்து எழுதிக்கொண்டு வந்து ஒரு கையில் பிடித்துக்கொண்டே அதில் என்னை கையொப்பம் போடச்சொல்லி என்னை கட்டாயப்படுத்தி கையெழுத்து போட வைத்தனர் என்று கு.வி.மு.ச.பிரவு 161 வாக்குமூலத்தில் உள்ளது. சாட்சி கூறியதை நான் பதிவு செய்தேன்.

மேற்படி பதிலில் கண்ட அந்த சாட்சியின் வாக்குமூலம் எ.த.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

கே: த.மு.மு.க முக்கிய பொறுப்பில் உள்ள ஷமீல் அகமது என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தீர்களா?

ப: இல்லை.

கே: ஒருவரை கட்டாயப்படுத்தி புகாரில் கையொப்பமிடச்சொன்னதை அலி அக்பரின் கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ள தாங்கள் மேற்சொன்ன ஷமீல் அகமது மீது நடவடிக்கை எடுத்துள்ளீர்களா?

ப: இல்லை. சாட்சி அவரது கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் கூறியதை அவர் எந்த இடத்தில் எந்த நேரத்தில் கூறினார் என்று எதுவும் குறிப்பிடவில்லை.

கே: அவ்வாறு சாட்சி குறிப்பிடாதபோது அதை கேட்டு தெளிவுப்படுத்தி பதிவு செய்திருக்கிறீர்களா?

ப: அப்போதைய சூழ்நிலையில் வழக்கு சம்பந்தமாக விசாரிக்கப்படவில்லை.

கே: அப்படியானால் சூழ்நிலைக்கு தகுந்தாற்போலத்தான் FIR போடுவீர்களா என்றால்?

ப: இல்லை. புகாரின் அடிப்படையில் தான் FIR போடுவோம்.

கே: புகார்தாரரான (Defacto complainant) அலி அக்பர் அவரது வாக்குமூலத்தில் "ஆம்பூர் நகர காவல் நிலையத்திடம் வந்திருந்த பள்ளிக்கொண்டா காவல் நிலைய பொறுப்பு ஆய்வாளர் வேப்பங்குப்பம் காவல் ஆய்வாளராகிய தங்களிடம் புகார் கொடுத்தேன்" என்று உள்ளதா என்றால் ?

ப: இருக்கிறது. சாட்சி விசாரித்தபோது அவர் தன் வாக்குமூலத்தில் கூறியதை நான் பதிவு செய்தேன்.

கே: தாங்கள் சுயநினைவோடுதான் அதை பதிவு செய்தீர்களா?

ப: ஆம்.

கே: கட்டாயப்படுத்தி அலி அக்பரிடம் கையெழுத்து வாங்கியதையும் அது குறித்து வாக்குமூலம் பதிவு செய்ததையும் முறையான அறிக்கையின் மூலம் நீதிமன்றத்திற்கு தெரிவித்திருக்கிறீர்களா?

ப: இல்லை. அவர் புகார் கொடுத்திருந்தால் நீதிமன்றத்தில் தெரிவித்திருப்பேன்.

கே: தாங்கள் ஆம்பூர் நகர காவல் நிலையத்தில் வாங்கிய தேதியிடப்படாத புகாருக்கும் முன்பாக தேதியிட்ட புகாரினை பெற்றதாக தாங்களே அலி அக்பரின் கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலம் பதிவு செய்திருப்பதால் தாங்கள் உண்மையை மறைத்து பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் புகாரினை பெற்றதாக பொய் சாட்சி சொல்லியிருக்கிறீர்கள் என்றால் ?

ப: சரியல்ல. என்னிடம் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.

கே: அ.த.சா.ஆ.82 ல் முதல் பக்கத்தில் வரிசை எண் 16 ல் "K.M.அலி அக்பர் புகார் மனு (முதல் புகார் மனு)" என்று உள்ளதா ?

ப: உள்ளது. ஆம்பூர் நகர காவல் நிலைய ஆய்வாளரிடம் கொடுக்கப்பட்ட புகார் மனு பின்னிட்டு என்னிடம் பெறப்பட்ட மனு. அதில் அனுமதிக்கப்பட்ட பகுதி வரிசை எண் 16 ஆனது எ.ம.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

கே: எ.ம.த.சா.ஆ.1 என்பது எ.ம.த.சா.ஆ.15 ஆகும். அதை பார்த்து ஆம்பூர் நகர காவல் நிலைய ஆய்வாளரின் கையொப்பமோ அல்லது அந்த நிலையத்தின் முத்திரையோ அல்லது ஆம்பூர்

காவல் நிலைய Proceedings ஆகியவையோ காணப்படுகிறதா என்பதை சொல்லுங்கள்?

ப: இல்லை.

கே: எ.ம.த.சா.ஆ.1 என்பது எ.ம.த.சா.ஆ.15–ல் முதல் புகார் என்பதை தாங்கள் அடைப்பு குறியிட்டு எழுதியிருக்கிறீர்களா என்றால் ?

ப: சரிதான். ஆம்பூர் நகர காவல் நிலைய ஆய்வாளரிடம் கொடுக்கப்பட்ட முதல் புகார் மனு.

கே: ஆம்பூர் காவல் நிலைய ஆய்வாளரிடம் கொடுக்கப்பட்ட முதல் புகார் என்று குறிப்பிட்ட எ.த.சா.ஆ.15 ல் எழுதப்பட்டுள்ளதா என்றால்?

ப: இல்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகு ஆம்பூர் நகர காவல் ஆய்வாளரிடம் கொடுக்கப்பட்ட புகாரை பின்னிட்டு பெறப்பட்ட புகார் மனுவை 01.07.2015 ம் தேதி நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன்.

கே: மேற்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகு காவல் ஆய்வாளரிடம் கொடுக்கப்பட்ட புகார்தான் எ.த.சா.ஆ.15 என்று குறிப்பிட்டுள்ளதா என்றால் ?

ப: இல்லை. ஆம்பூர் நகர காவல் ஆய்வாளரிடம் கொடுக்கப்பட்ட புகார் பின்னிட்டு பெறப்பட்ட புகார் மனு ஆகும்.

கே: ஆம்பூர் நகர காவல் ஆய்வாளர் பெற்றதாக எ.த.சா.ஆ.1 ல் குறிப்பிட்டுள்ளதா என்றால்?

ப: குறிப்பிடவில்லை.

கே: எ.த.சா.ஆ.1 என்பது ஆம்பூர் நகர காவல் நிலைய ஆய்வாளரால் பெறப்பட்டதற்கான எந்தவிதமான குறிப்புகளோ அல்லது அரசு நடைமுறை பதிவுகளோ இல்லாததால் 26.06.2015 புகாரினை

தாங்கள்தான் பெற்றீர்கள். இந்த நீதிமன்றத்தில் பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால் ?

ப: சரியல்ல

கே: எ.த.சா.ஆ.1 ஐ தங்களுக்கு ஆம்பூர் காவல் நிலைய ஆய்வாளர் கொடுத்ததாக சொல்லும் நீங்கள் அந்த ஆவணத்தில் ஏதேனும் அதற்கான குறிப்புகள் எழுதிய கையொப்பமிட்டிருக்கிறீர்களா என்றால்?

ப: குறிப்பிடப்படவில்லை. சூழ்நிலையை கருதி பணிச்சுமை காரணத்தால் இந்த வழக்கு கோப்பை சிபிசிஐடிக்கு ஒப்படைக்கக்கோரி கனம் காவல் கண்காணிப்பாளர் அவர்களின் ஆணைப்படி ஒப்படைக்க வேண்டியிருந்ததால் வழக்குக்கோப்பில் இருந்த உண்மை ஆவணங்களை ஒப்படைத்தோம்.

கே: காவல் கண்காணிப்பாளர் ஆணைப்படி என்று மேலே பதில் அளித்துள்ளீர்கள். அதற்கான பதிவு ஏதும் எ.த.சா.ஆ.1 ல் பதிவு செய்துள்ளீர்களா?

ப: இல்லை.

கே: மேலே தங்களால் அளிக்கப்பட்ட பதில்களை ஒப்பிட்டு பார்க்கையில் இந்த நீதிமன்றத்தில் முற்றிலும் பொய்யான வாக்குமூலங்களை தந்திருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: அ.த.சா.ஆ.2 ஆனது யாருக்கு முகவரியிடப்பட்டிருக்கிறது என்றால்?

ப: உயர்திரு காவல் ஆய்வாளர் நகர காவல் நிலையம் ஆம்பூர் அவர்களுக்கு முகவரியிடப்பட்டுள்ளது.

கே: அந்த அ.த.சா.ஆ.2 தங்களுக்கு எந்த கடிதத்தின் மூலம் பெறப்பட்டீர்கள் ?

ப: பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் அப்போது இருந்த நிலைய எழுத்தர் மூலமாக ஆம்பூர் நகர காவல் ஆய்வாளரால் அனுப்பி வைக்கப்பட்ட புகார் மனு பின்னிட்டு பெறப்பட்டது.

கே: ஆம்பூர் நகர காவல் ஆய்வாளரின் சுருக்கோப்பமமோ அல்லது அந்த நிலையத்தில் முத்திரையோ அல்லது தாங்கள் குறிப்பிட்டதுபோல பள்ளிக்கொண்டா காவல் நிலைய எழுத்தர் பெற்றதாகவோ ஏதேனும் குறிப்புகள் அ.த.சா.ஆ.2 ல் உள்ளதா என்றால் ?

ப: இல்லை.

கே: அதனால் அந்த அ.த.சா.ஆ.2 என்பது தங்களால் பெறப்பட்டது அதை மறைத்து இந்த நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: சட்டப்படி 26.06.2015 தேதியிட்ட அலி அக்பர் தங்களிடம் கொடுத்த முதல் புகாரில் வழக்கு எதிரிகளினுடைய பெயர் இல்லை என்பதை தெரிந்துக்கொண்டு அதன் பின்னிட்டு வழக்கு எதிரிகளின் பெயர்களை எழுதி தேதியிடப்படாத புகாரினை பெற்று அந்த இரண்டாம் புகாரினை முதல் தகவல் அறிக்கையாக பதிவு செய்துள்ளது சட்டவிரோதமானது என்றால்?

ப: சரியல்ல.

கே: அ.த.சா.ஆ.79 ல் ஆம்பூர் மருத்துவமனையில் ஷமீல் பாஷாவிற்கு சிகிச்சை அளித்ததாக ஏதேனும் குறிப்புகள் உள்ளனவா ?

ப: இல்லை.

கே: தங்களால் பதிவு செய்யபப்பட்ட கௌஷ் பாஷாவின் (Father in law of Shameel Basha) கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் முதன்முதலில் எந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக வாக்குமூலம் பதிவு செய்திருக்கிறீர்கள்?

ப: ஆம்பூர் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன் என்று கூறியுள்ளார்.

கே: மேலே குறிப்பிட்டவாறு வாக்குமூலம் பதிவு செய்த தாங்கள் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திலிருந்து யார் ஆம்பூர் அரசு மருத்துவமனையிலிருந்து தகவல் பெற்றது என்று கேட்டு புலனாய்வு செய்து பதிவு செய்திருக்கிறீர்களா?

ப: அப்போது விசாரணையில் ஆம்பூர் மருத்துவமனையிலிருந்து யார் தகவல் பெற்றது என்று என்னுடைய விசாரணையில் யாரும் கூறவில்லை.

கே: அப்படியானால் தாங்கள் கேட்டு தங்கள் விசாரணையில் பதிவு செய்துள்ளீர்களா?

ப: இல்லை.

கே: ஆம்பூர் மருத்துவமனையிலிருந்து தகவல் பெற்றதாகவோ அல்லது பெறாமல் விடுபட்டதாகவோ ஏதேனும் ஒரு ஆவணத்தில் தாங்கள் தங்களின் விசாரணயைில் குறிப்பிட்டு பதிவு செய்துள்ளீர்களா?

ப: இல்லை. என்னுடைய விசாரணையில் யாரும் மருத்துவமனை சேர்த்தது பற்றி கூறவில்லை.

கே: ஷமீல் பாஷாவை, கௌஷ் பாஷா ஆம்பூர் மருத்துவமனை அழைத்துச்சென்று சேர்த்ததாக தங்களால் பதிவு செய்யப்பட்ட

குவி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் இருப்பதையோ மறைத்து இந்த நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளித்துள்ளீர்கள் என்றால்?

ப: சாட்சி கௌஷ் பாஷா அவரின் கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.

கே: மேற்கண்டவாறு மருத்துவமனையில் ஷமீல் பாஷாவை சேர்த்தது குறித்து தெரிந்திருந்தும் ஏதேனும் மருத்துவ குறிப்புகளை ஆம்பூர் அரசு மருத்துவமனையிலிருந்து பெற்றீர்களா?

ப: இல்லை. பணிச்சுமையின் காரணத்தால் என்னால் பெற இயலவில்லை.

கே: தாங்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ள அ.த.சா.ஆ.82 ல் வரிசை எண் 13–ல் Bind over செய்த ஆவணத்தை நீதிமன்றத்திற்கு 01.07.2015–ல் அனுப்பி வைத்திருக்கிறீர்கள். அதில் கௌஷ் பாஷாவிடம் ஷமீல் பாஷாவை நல்ல முறையில் அழைத்துச்செல்வதாக எழுதி கையொப்பமிட்டு கொடுத்துவிட்டு ஷமீல் பாஷாவை அழைத்துச்சென்றதாக பதிவுகள் இருக்கிறது என்றால் ?

ப: சரிதான். ஷமீல் பாஷாவினுடைய கைரேகை பதிவு செய்யப்பட்டுள்ளது.

கே: அதில் கௌஷ் பாஷாவின் கையெழுத்து உள்ளதா என்றால்?

ப: ஆம். உள்ளது.

கே: எந்த தேதி, எத்தனை மணிக்கு ஷமீல் பாஷாவை அழைத்துச்சென்றதாக உள்ளது ?

ப: 19.06.2015–ம் தேதி பகல் 13.00 மணிக்கு பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திலிருந்து அழைத்துச்சென்றதாக உள்ளது.

கே: ஆம்பூர் அரசு மருத்துவமனை Accident Register–ல் எத்தனை மணிக்கு ஷமீல் பாஷாவை மருத்துவமனையில் சேர்த்ததாக உள்ளது என்றால்?

ப: 19.06.2015 அன்று மாலை 04.30 மணி என்று பதிவுகள் உள்ளது.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திலிருந்து ஆம்பூர் மருத்துவமனைக்கு எவ்வளவு நேரத்தில் போய் சேரலாம் என்றால்?

ப: சுமார் ஒரு மணி நேரத்தில் போய் சேரலாம்.

கே: ஒரு மணி நேரத்தில் போகலாம் என்று கூறும் நீங்கள் மதியம் 01.00 மணியிலிருந்து மாலை 04.30 மணி வரை கௌஷ் பாஷாவினுடைய பொறுப்பில்தான் ஷமீல் பாஷா இருந்தார் என்றால் ?

ப: அழைத்துச்சென்றவர்தான் பொறுப்பு. ஷமீல் பாஷாவை கௌஷ் பாஷா என்பவர் 19.06.2015 அன்று பகல் 13.00 மணிக்கு அழைத்துச்சென்றார். அன்றே மாலை 04.30 மணிக்கு ஆம்பூர் அரசு மருத்துவமனையில் சேர்த்ததாக விபத்து பதிவேட்டில் பதிவாகியிருக்கிறது. ஆவணங்களின் அடிப்படையில் சரிதான்.

கே: 19.06.2015 பகல் 13.00 மணி முதல் மாலை 16.30 மணி வரை ஷமீல் பாஷா என்பவர் கௌஷ் பாஷாவின் பொறுப்பில் இருந்தார் என்பது குறித்து தங்களின் சிபிசிஐடியிடம் கொடுத்த கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருக்கிறீர்களா?

ப: இல்லை.

கே: 27.06.2015 முதல் 01.07.2015 வரை புலன் விசாரணை அதிகாரியாக இருந்த தாங்கள் ஆம்பூர் அரசு மருத்துவமனை

மருத்துவர்களிடமிருந்து ஏதேனும் கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலம் பதிவு செய்தீர்களா?

ப: இல்லை.

கே: 27.06.2015 முதல் 01.07.2015 வரை வழக்கின் புலன் விசாரணை அதிகாரியாக இருந்த தாங்கள் ஆம்பூர் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்குள்ள மருத்துவ ஆவணங்களை பார்வையிட்டீர்களா?

ப: இல்லை. இவ்வழக்கு குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டதால் நான் ஆம்பூர் மருத்துவமனைக்கு சென்று விசாரிக்கவில்லை.

கே: தாங்கள் ஆம்பூர் மருத்துவமனை சென்று ஷமீல் பாஷாவினுடைய சிகிச்சைக்கான மருத்துவ ஆவணங்களை பார்வையிட்டு புலன் விசாரணையை தொடர வேண்டிய தாங்கள் வேண்டுமென்றே அவ்வாறு செய்யாமல் வழக்கு எதிரிகளின் மீது பொய்யான வழக்கு தொடர வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு மருத்துவமனையில் இருந்த ஆவணங்களை பார்வையிட தவிர்த்திருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: 26.06.2015 முதல் 01.07.2015 வரை புலன் விசாரணை அதிகாரியாக இருந்த நீங்கள் ஆம்பூர் அரசு மருத்துவமனைக்கு சென்று ஷமீல் பாஷாவினுடைய சிகிச்சை குறித்த மருத்துவ ஆவணங்களை பார்வையிடவில்லை அதனை சேகரிக்கவும் இல்லை என்றால்?

ப: சரியல்ல. வழக்கின் புலன் விசாரணை நீதித்துறை நடுவர் அவர்கள் விசாரணையில் இருப்பதால் நான் மருத்துவமனைக்கு

சென்று ஆவணங்களை பார்க்கவில்லை. ஆவணங்களை சேகரிக்கவுமில்லை.

கே: மருத்துவ ஆவணங்களை சேகரித்து பார்வையிட்டிருந்தால் வழக்கின் எதிரிகள் மீது வழக்கு தொடர இயலாத நிலை ஏற்பட்டுவிடும் என்று கருதியதால் வேண்டுமென்றே ஆவணங்களை பார்வையிடாமலும், சேகரிக்காமலும் செயல்பட்டிருக்கிறீர்கள் என்றால் ?

ப: சரியல்ல.

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 04.33 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.04.15 17:23:44 +0530